# Geography Model Test Questions 14 in Tamil With Answers

1. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் சுத்திகரிப்பு ஆலை பின்வரும் எந்த இடத்தில் உள்ளது.

(A) நெய்வேலி (B) வேலூர் **(C) மணலி** (D) ஆவடி

2. கனிம தாதுக்களின் சோதனை ஆய்வு மையத்தின் (MECL) தலைமையிடம் எங்குள்ளது?

(A) புதுடெல்லி (B) பெங்களூர் (C) சென்னை **(D) நாக்பூர்**

3. பெங்குவின் அதிகமாக காணப்படுகிறது.

(A) கனடா (B) ரஷ்யா (C) ஐக்கிய அமெரிக்க நாடுகள் **(D) அண்டார்டிகா**

4. சைலன்ட் வேலி திட்டம் எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது.

(A) மேற்கு வங்காளம் **(B) கேரளா** (C) சிக்கிம் (D) மகாராஷ்டிரா

5. உலகின் கூரை

(A) ரோம் **(B) பாமீர்** (C) பாலமர் மலை (D) டாக்கா

6. தற்பொழுது இந்தியாவில் ---------- உள்ளன.

(A) 25 மாநிலங்கள் மற்றும் 9 யூனியன் பிரதேசங்கள்

(B) 24 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்

**(C) 28 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்கள்**

(D) 21 மாநிலங்கள் மற்றும் 11 யூனியன் பிரதேசங்கள்

7. தமிழ்நாட்டின் நுழைவுவவாயில்

(A) சென்னை **(B) தூத்துக்குடி** (C) கன்னியாகுமரி (D) திருச்சி

8. தமிழ்நாட்டில் உள்ள மொத்த மாவட்டங்கள்

(A) 14 (B) 16 (C) 25 **(D) 30**

குறிப்பு: 2008 முதல் 32 மாவட்டங்கள்

9. இந்தியாவின் மேற்குக் கடற்கரையோரத்தின் வட பகுதியில் காணப்படுகிடுவது

(A) மலபார் கடற்கரை **(B) கொங்கணக் கடற்கரை**

(C) சோழமண்டலக் கடற்கரை (D) ஹிமாத்ரி

10. வண்டல்மண் கீழ்க்கண்ட மநரிலங்களுள் ஒரு மாநிலத்தைத் தவிர எல்லா மாநிலங்களிலும் காணப்படுகின்றது. அம்மாநிலம்

(A) குஜராத் **(B) கேரளா** (C) ஒரிஸ்ஸா (D) மஹாராஷ்டிரா

11. எம்மாநிலம் அணுசக்தி தாது உற்பத்தியில் முதன்மையிடம் வகிக்கின்றது?

(A) கேரளம் (B) ராஜஸ்தான் **(C) பீஹார்** (D) மேற்கு வங்காளம்

12. எம்மாநிலத்தில் அதிக எண்ணிக்கை கொண்ட குழாய்க் கிணறுகள் காணப்படுகின்றன?

(A) பஞ்சாப் (B) ஹரியானா (C) பீஹார் **(D) உத்திரப்பிரதேசம்**

13. வங்காளவிரிகுடாவில் காணப்படும் கீழ்க்காணும் துறைமுகங்களில் எது இந்தியாவின் முக்கியத் (பெரிய) துறைமுகம் அல்ல?

(A) சென்னை **(B) கடலூர்** (C) தூத்துக்குடி (D) பாரதீப்

14. இந்தியாவில் சூறாவளி அடிக்கடி காணப்படும் கடற்கரை

(A) கொங்கண் **(B) சோழ மண்டலம்** (C) குஜராத் (D) மலபார்

15. தமிழ் நாட்டின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது

(A) சேலம் **(B) கோயம்புத்தூர்** (C) மதுரை (D) சென்னை

16. பைகாரா மற்றும் குந்தா நீர் மின் நிலையங்கள் அமைந்துள்ள மாநிலம்

(A) பஞ்சாப் **(B) தமிழ்நாடு** (C) பீஹார் (D) அஸ்ஸாம்

17. தமிழ்நாட்டில் காவேரி டெல்டா பகுதியில் நீர் பாசன வசதி உடைய நில அளவு

**(A) 3 இலட்சம் ஹெக்டர்** (B) 4 இலட்சம் ஹெக்டர்

(C) 5 இலட்சம் ஹெக்டர் (D) 6 இலட்சத் ஹெக்டா

18. மஞ்சள் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தில் பயிரிடப்படுகிறது?

(A) சேலம் **(B) ஈரோடு** (C) மதுரை (D) தஞ்சாவூர்

19. எந்திர உதிரி பாகங்கள் தயாரிக்கும் சிறுதொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அதிகமாக இருக்கும் மாவட்டங்கள்

**(A) கோயம்புத்தூர், திருவள்ளுர், சென்னை** (B) கோயம்புத்தூர், சேலம், நாமக்கல்

(C) கோயம்புத்தூர், சேலம் (D) கோயம்புத்தூர் விருதுநகர், சென்னை

20. 80% காப்பி பயிரிடப்படும் இடம்

(A) கேரளா (B) சேர்வராயன் குன்றுகள் **(C) கர்நாடகா** (D) நீலகிரி

21. இந்தியாவின் கோதுமைக்களஞ்சியம்

(A) ஹிமாச்சல பிரதேசம் (B) உத்திரப்பிரதேசம் (C) அஸ்ஸாம் **(D) பஞ்சாப்**

22. கரிசல் மண் இந்த விளைச்சலுக்கு ஏற்றது

(A) அரிசி (B) உருளை **(C) பருத்தி** (D) ரப்பர்

23. தமிழ்நாட்டில் பெட்ரோலியம் கிடைக்கும் டெல்டா பகுதி

(A) தாமிரபரணி (B) வைகை **(C) காவிரி** (D) பாலாறு

24. புவிக்கு அருகில் உள்ள கோள்

**(A) செவ்வாய்** (B) வெள்ளி (C) புதன் (D) வியாழன்

25. காஞ்சிபுரத்தின் புகழ் வாய்ந்த உற்பத்தி

**(A) பட்டு** (B) தேயிலை (C) காபி (D) மட்கலன்

26. தமிழ்நாட்டின் முக்கிய பயிர்

(A) நிலக்கடலை (B) சோளம் **(C) நெல்** (D) கம்பு

27. தமிழ்நாட்டில் விவசாயத்தில் முக்கியத்துவம் கொடுக்கபப்படுகினற் நிலையம் உள்ள இடம்

(A) முதுமலை (B) கூடுவாஞ்சேரி **(C) கோயம்புத்தூர்** (D) பூதனூர்

28. மக்கள் அடர்த்தியின் அடிப்படையாக கொண்டு எந்த மாவட்டம் முதலிடம் வகிக்கிறது (2001)?

(A) கோயம்புத்தூர் (B) திருச்சிராப்பள்ளி (C) சேலம் **(D) சென்னை**

29. 2001-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி எந்த மாநிலம் அதிக மக்கள் தொகை அடர்த்தியைக் கொண்டது?

(A) கேரளம் (B) மகாராஷ்டிரம் (C) உத்திரப்பிரதேசம் **(D) மேற்குவங்காளம்**

30. அஜந்தா குகை அமைந்துள்ள மாநிலம்

**(A) மஹாராஷ்டிரா** (B) ஆந்திரப்பிரதேசம் (C) ஒரிஸ்ஸா (D) கர்நாடகம்

31. இந்தியாவில் மிக நீளமான இருப்புப்பாதை

(A) டெல்லி – மும்பாய் (B) டெல்லி – கொல்கத்தா

**(C) கௌஹாத்தி – திருவனந்தபுரம்** (D) அமிர்தசரஸ் - பூரி

32. பெரியார் வனவிலங்கு சரணாலயம் அமைந்துள்ள மாநிலம்

(A) தமிழ்நாடு **(B) கேரளா** (C) கர்நாடகம் (D) ஆந்திரப்பிரதேசம்

33. அதிவேகமாக மற்றும் திடீரென நழுவி விழுகிற பனி/பனிக்கட்டிப் பாறை

(A) நிலச்சரிவு **(B) அவலான்ச்** (C) பாறை நழுவுதல் (D) கடற்கோள்

34. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) அதிர்வலைமானி | 1. இமயமலை |
| (b) தக்காண பீடபூமி | 2. அந்தமான் |
| (c) பாரைன் தீவு | 3. நிலநடுக்கம் |
| (d) டெதிஸ் கடல் | 4. பசால்ட் லாவா |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| **(C)** | **3** | **4** | **2** | **1** |
| (D) | 2 | 1 | 4 | 3 |

35. கீழ்க்கண்ட சொற்றொடர்களை நோக்கவும்

கூற்று (A) : அண்மையில் பத்தாண்டு காலமாக தமிழ்நாட்டில் தேனி மாவட்டத்தில் கொம்பை மற்றும் போடி நாயக்கனூருக்கு இடையே உள்ள கிராமங்கள் மணல் புயலால் தீவிர பாதிப்புக்கு ஆளாகி வருகின்றன

காரணம் (R): இக்கிராமங்கள் மேற்கு தொடர்ச்சி மலையின் மழை மறைவு பிரதேசத்தில் அமைந்துள்ளன.

கீழ்க்காணும் குறியீடு மூலம் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க:

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரியானதே (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமே.

**(B) (A) மற்றும் (R) இரண்டும் சரியானதே, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.**

(C) (A) சரி (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

36. கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்:

**(A) இந்திய வனவிலங்கு இருப்பிடங்களில் காண்டாமிருக்கும் மற்றும் காட்டெருமைகளுக்கான தேசியப்பூங்காவாக காஜிரங்கா சிறந்து விளங்குகிறது**

(B) இந்திய வனவிலங்கு இருப்பிடங்களில் சிங்கம் மற்றும் காட்டெருமைகளுக்கான தேசியப்பூங்காவாக காஜிரங்கா சிறந்து விளங்குகிறது.

(C) இந்திய வனவிலங்கு இருப்பிடங்களில் புலி மற்றும் யானைகளுக்கான தேசியப்பூங்காவாக காஜிரங்கா சிறந்து விளங்குகிறது.

(D) இந்திய வனவிலங்கு இருப்பிடங்களில் சிங்கம் மற்றும் யானைகளுக்கான தேசியப் பூங்காவாக காஜிரங்கா சிறந்து விளங்குகிறது.

37. செம்மண் மிகப்பரவலாகக் காணப்படுவது

(A) கங்கைச்சமவெளி **(B) தீபகற்ப இந்தியா**

(C) இமயமலை (D) கடற்கரைச் சமவெளிகள்

38. இந்தியாவில் முதன் முதலில் காப்பி சாகுபடி நடைபெற்ற மாநிலம்

(A) கேரளா (B) தமிழ்நாடு **(C) கர்நாடகம்** (D) இமாசலப்பிரதேசம்

39. தமிழகத்தில் எந்த மாவட்டம் ஆண்-பெண் விகிதாச்சாரத்தில் முதலிடம் வகிக்கறிது?

(A) மதுரை (B) திருச்சிராப்பள்ளி (C) சேலம் **(D) தூத்துக்குடி**

40. இந்தியாவின் தங்க இடை

(A) ஸிஸால் (B) ஹெம்ப் (C) பருத்தி **(D) சணல்**

41. மேகாலயா மாநிலத்தின் தலைநகரம்

(A) காந்திநகர் **(B) ஷில்லாங்** (C) இம்பால் (D) அகர்தலா

42. தீபகற்ப இந்தியாவில் பின்வருவனவற்றுள் மிகப்பெரிய நதி எது?

**(A) கோதாவரி** (B) கிருஷ்ணா (C) மஹாநதி (D) காவேரி

43. உலகின் மிக ஆழமான ஏரி

(A) காஸ்பியன் **(B) பைகால் ஏரி** (C) டங்கனீகா ஏரி (D) கபீரியர் ஏரி

44. தமிழ்நாட்டில் பாயும் மிக நீண்ட ஆறு

(A) பாலாறு (B) வைகை **(C) காவேரி** (D) தாமிரபரணி

45. கொள்ளிடம் ஆறு ஐந்தாக பிரியும் இடம்

(A) கோடிக்கரை **(B) முக்கொம்பு** (C) பூம்புகார் (D) முண்டந்துறை

46. தூசுக்களாலும், வாயுக்களாலும் ஆன உறைந்த பனிப்பந்து

(A) பாறைத்துண்டுகள் (B) எரிகற்கள்

(C) கோள்கள் **(D) வால் நட்சத்திரங்கள்**

winmeen.com

47. புவியின் மேற்பரப்பை வடிவமைப்பதில் முக்கிய பங்கினை வகிக்கும் மிகச் சிறந்த இரண்டு சக்திகளாவன

**(A) நிலநடுக்கம், எரிமலை** (B) மழைப்பொழிவு, ஆறுகளும்

(C) சூரியனின் வெப்ப ஆற்றலும், ஈர்ப்பு விசையும் (D) சிதைவினாலும், நிலச்சரிவினாலும்

48. கீழே கொடுக்கப்பட்டுள்ள இடங்களில் எங்கு மின்சாரம் நீர்வீழ்ச்சி சக்தியால் தயாரிக்கப்படுகிறது?

(A) நெய்வேலி (B) கல்பாக்கம் **(C) மேட்டூர்** (D) தூத்துக்குடி

49. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| ஆறுகள் | தோற்றுவாய் |
| (a) சம்பல் | 1. மோஹோ (விந்தியத்தொடர்) |
| (b) சோன் | 2. அமர்காண்டக் |
| (c) சிந்து | 3. வெரிநாக் |
| (d) ஜீலம் | 4. கைலாச தொடர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| **(D)** | **1** | **2** | **4** | **3** |

50. மாங்கனீசு பெருமளவில் காணப்படும் மாநிலம்

**(A) ஒரிஸா** (B) மத்தியப்பிரதேசம் (C) கர்நாடகா (D) இராஜஸ்தான்

51. தமிழ்நாட்டில் காகித ஆலை அமைந்துள்ள இடம்

(A) எடப்பாடி (B) ராசிபுரம் **(C) பள்ளிப்பாளையம்** (D) நாமக்கல்

52. ஜவ்வாது மலை அமைந்துள்ள மாவட்டம்

(A) கடலூர் **(B) வேலூர்** (C) தர்மபுரி (D) சேலம்

53. சந்திரக்கடல் என்றால் என்ன?

(A) சந்திரனிலுள்ள சிறிய கடல் **(B) சந்திரனிலுள்ள இருண்ட சமவெளி**

(C) தென் அமெரிக்காவிற்கு தெற்கேயுள்ள சிறிய கடல் (D) இவை எதுவுமில்லை

54. சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கோள்

(A) வியாழன் **(B) புதன்** (C) சனி (D) செவ்வாய்

55. பாறை நுண்துளைகளின் கொள்ளவுக்கும், அப்பாறையின் மொத்த கொள்ளளவுக்கும் இடையேயான விகிதமானது

**(A) ஊடுருவ இடந்தரும் இயல்பாகும்** (B) நுண்துளை இயல்பாகும்

(C) செறிவு மண்டலாமாகும் (D) நீர்மட்டமாகும்

56. 23 ½ º வட அட்சக் கோட்டின் பெயரானது

(A) மகரகோடு (B) ஆர்டிக் வட்டம் (C) அண்டார்டிக் வட்டம் **(D) கடக கோடு**

57. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I (சிமெண்ட் ஆலை அமைவிடம்) | பட்டியல் II (மாவட்டம்) |
|---|---|
| (a) மதுக்கரை | 1. இராமநாதபுரம் |
| (b) டால்மியாபுரம் | 2. திருநெல்வேலி |
| (c) ஆலங்குளம் | 3. திருச்சிராப்பள்ளி |
| (d) தாழையூத்து | 4. கோயம்புத்தூர் |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| **(B)** | **4** | **3** | **1** | **2** |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 3 | 1 | 2 | 4 |

58. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) கனிமங்கள் | 1. 66 ½ º N |
| (b) காவேரி | 2. 66 ½ º S |

(c) ஆர்க்டிக் வட்டம் 3. நொய்யல்

(d) அண்டார்க்டிக் வட்டம் 4. புாறைகள்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | **1** | **2** | **4** | **3** |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

59. சரியான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க

**(A) மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து இறந்து போன செடிகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து நிலக்கரியும் எண்ணெய்யும் உருவாயின.**

(B) மில்லியன் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து இறந்து போன செடிகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து நிலக்கரியும் எண்ணெய்யும் உருவாகவில்லை

(C) நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து இறந்து போன செடிகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து நிலக்கரியும் எண்ணெய்யும் உருவாயின

(D) ஆயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்து இறந்து போன செடிகள் மற்றும் விலங்குகள் ஆகியவற்றிலிருந்து நிலக்கரியும் எண்ணெய்யும் உருவாயின

60. புகழ்பெற்ற கிர் காடுகள் அமைந்துள்ள மாநிலம்

(A) மஹாராஷ்டிரா (B) கர்நாடகா (C) மத்தியப்பிரதேசம் **(D) குஜராத்**

61. தமிழ்நாட்டில் இரும்பு தாது படிவங்கள் இங்கு காணப்படுகின்றன.

(A) மதுரை மாவட்டம் **(B) சேலம் மாவட்டம்**

(C) பெரம்பலூர் மாவட்டம் (D) திருச்சிராப்பள்ளி மாவட்டம்

62. தமிழ்நாட்டில் கீழ்க்கண்டவற்றுள் எது கடலோர மாவட்டமாக இல்லை?

(A) ராமநாதபுரம் (B) கடலூர் (C) நாகப்பட்டினம் **(D) திருச்சிராப்பள்ளி**

63. தென்மேற்கு பருவக்காற்று தனது ஈரப்பதத்தினை பெற்றுக் கொள்வது

**(A) அரபிக் கடலிலிருந்து** (B) இந்துமாக் கடலிலிருந்து

(C) வங்காள விரிகுடா கடலிலிருந்து (D) பசிபிக் கடலிலிருந்து

64. கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியானதைத் தேர்ந்தேடுக்கவும்

**(A) வளிமண்டல அழுத்தம் வெப்ப நிலையின் நேரடி விளைவாகும்**

(B) வளிமண்டல அழுத்தம் வெப்ப நிலையின் மறைமுக விளைவாகும்

(C) வளிமண்டல அழுத்தம் காற்று எடையின் நேரடி விளைவாகும்

(D) வளிமண்டல அழுத்தம் காற்று எடையின் மறைமுக விளைவாகும்

65. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி

கூற்று (A) : தமிழ்நாட்டின் தென்பகுதி மிக அதிக மழைப்பொழிவினை ஜீன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை பெறுகிறது.

காரணம் (R) : தமிழ்நாட்டின் தென்பகுதி, ஏலக்காய் மலைகளின் எதிர் முகத்தில் அமைந்துள்ளது

இவற்றுள்:

**(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.**

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(C) (A) சரி, ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

66. கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்.

(A) தமிழ்நாடு $8^o$ 5' – $17^o$ 35' வ.அட்சகோடு மற்றும் $50^o$ 15' – $80^o$ 20' கி. தீர்க்கக் கோடு வரை பரவியுள்ளது.

(B) தமிழ்நாடு $10^o$ 5' – $13^o$ 35' வ.அட்சகோடு மற்றும் $78^o$ 15' – $80^o$ 20' கி. தீர்க்கக்கோடு வரை பரவியுள்ளது

(C) தமிழ்நாடு $8^o$ 5' – $17^o$ 35' வ.அட்சகோடு மற்றும் $79^o$ 15' – $80^o$ 20' கி. தீர்க்கக்கோடு பரவியுள்ளது

**(D) தமிழ்நாடு $8^o$ 5' – $13^o$ 35' வ. அட்சகோடு மற்றும் $76^o$ 15' – $80^o$ 20' கி. தீர்க்கக்கோடு வரை பரவியுள்ளது**

67. உயரம் அதிகரிக்கும் பொழுது காற்றின் வெப்பநிலையும் சமமாக குறையும் வீதம் தோராயமாக

**(A) 1000 மீட்டருக்கு $6.5^o$ செல்லியஸ்** (B) 1000 மீட்டருக்கு $5^o$ செல்சியஸ்

(C) 100 மீட்டருக்கு $6.5^o$ செல்சியஸ் (D) 1000 மீட்டருக்கு $6^o$ செல்சியஸ்

68. பெருங்கடலின் மேற்பரப்பில் கிடையாக நகருகிற கடல் நீரானது

(A) புயல்களாகும் (B) ஓதங்களாகும் (C) அலைகளாகும் **(D) நீரோட்டங்களாகும்**

69. கீழ்க்காணும் சொற்றொடர்களில் சரியானதைத் தேர்தெடுக்கவும்.

(A) புவியின் மேற்பரப்பு எப்பொழுதும் நகர்ந்த வண்ணம் உள்ளது

winmeen.com

(B) புவியின் மேற்பரப்ப எப்பொழுதுமே நகர்வதில்லை

**(C) புவியின் மேற்பரப்பு எப்பொழுதாவது மட்டுமே நகர்கிறது**

(D) புவியின் மேற்பரப்பு அவ்வப்பொழுது மட்டுமே நகர்கிறது

70. இந்தியாவில் காட்டு ஆராய்ச்சி மையம் உள்ள இடம்

(A) டெல்லி **(B) டெஹ்ராடூன்** (C) சகாரன்பூர் (D) கோயம்புத்தூர்

71. தமிழ்நாட்டில் வண்டல் சமவெளி காணப்படுவது ---------------- மாவட்டங்களில்

(A) கோவை மற்றும் மதுரை **(B) தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்**

(C) வேலூர் மற்றும் திருவண்ணாமலை (D) காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர்

72. வைகை ஆறு எங்கு பாய்கிறது?

(A) திருச்சிராப்பள்ளி (B) தஞ்சாவூர் **(C) மதுரை** (D) கோயம்புத்தூர்

73. தமிழ்நாட்டில் கொடைக்கானல் எந்த மலையில் அமைந்துள்ளது?

(A) சேர்வராயன் மலைகள் (B) ஜவ்வாது மலைகள்

**(C) பழனி மலைகள்** (D) கொல்லி மலைகள்

74. தமிழகத்தின் டெட்ராய்டு நகரம் என்று அழைக்கப்படும் நகரம் எது?

(A) கோயம்புத்தூர் (B) மதுரை **(C) சென்னை** (D) திருச்சி

75. இந்தியாவில் முதல் ரப்பர் தோட்டம் எங்கு அமைக்கப்பட்டது?

(A) தமிழ்நாடு (B) கோவா **(C) கேரளா** (D) கர்நாடகம்

76. இந்தியாவின் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் உள்ள இடம்

(A) சென்னை (B) மும்பை (C) ஹைதராபாத் **(D) பெங்களூர்**

77. தமிழகத்தில் பெட்ரோலியம் பெருவாரியாகக் கிடைக்கும் மாவட்டம்

(A) தஞ்சாவூர் (B) புதுக்கோட்டை (C) திருவாரூர் **(D) நாகப்பட்டினம்**

78. தமிழ்நாடு அதிக மழைப்பொழிவை பெறக்கூடிய மாதங்கள்

(A) ஜனவரி – மார்ச் (B) ஏப்ரல் - ஜீன்

(C) ஜீலை – செப்டம்பர் **(D) அக்டோபர் - நவம்பர்**

79. ஆசியாவின் மிக நீண்ட மலைத் தொடர்கள்

(A) குன்லுன் மலைத் தொடர்கள் **(B) இமய மலைத்தொடர்கள்**

(C) இந்துகுஷ் மலைத் தொடர்கள் (D) கின்கன் மலைத் தொடர்கள்

80. $1^{o}$ தீர்க்க ரேகையைக் கடக்க பூமி எடுத்துக் கொள்ளும் நேரம்

winmeen.com

(A) 5 நிமிடம் (B) 24 மணி **(C) 4 நிமிடம்** (D) 2 நிமிடம்

81. தீபகற்ப இந்தியாவின் மிக நீளமான ஆறு

(A) மகாநதி (B) தபதி (C) காவேரி **(D) கோதாவரி**

82. மணிமுத்தாறு அணைக்கட்டு அமைந்துள்ள மாவட்டம்

**(A) திருநெல்வேலி** (B) கோயம்புத்தூர் (C) கடலூர் (D) தஞ்சாவூர்

83. சதுப்புநிலக் காடுகள் காணப்படுவது

**(A) கடற்கரை மற்றும் டெல்டா பகுதிகளில்** (B) பீடபூமிகள் மற்றும் பள்ளத்தாக்குகள்

(C) மலைச்சரிவுகள் மற்றும் பள்ளத்தாக்குகள் (D) சமவெளிகள் மற்றும் பீடபூமிகள்

84. ஆழம் அதிகரிக்க அதிகரிக்க வெப்ப வீதம் அழைக்கப்படுவது

(A) சாதாரண லாப்ஸ் வீதம் **(B) புவிவெப்ப சரிவளவு**

(C) தலைகீழ் வெப்பவிகிதம் (D) பூரிதநிலை விகிதம்

85. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I (நதிகள்) | பட்டியல் II (உற்பத்தியிடம்) |
|---|---|
| (a) கோதாவரி | 1. இராஜஸ்தான் |
| (b) காவேரி | 2. மத்தியப்பிரதேசம் |
| (c) தபதி | 3. மகாராஷ்டிரா |
| (d) சபர்மதி | 4. கர்நாடகா |

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| **(B)** | **3** | **4** | **2** | **1** |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

86. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான பதிலை தேர்ந்தெடு:

| பட்டியல் I | பட்டியல் II |
|---|---|
| (a) நெல் | 1. பஞ்சாப் |

(b) கோதுமை 2. கர்நாடகம்

(c) கேழ்வரகு 3. கேரளா

(d) காப்பி 4. தமிழ்நாடு

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| **(C)** | **4** | **1** | **2** | **3** |
| (D) | 2 | 1 | 4 | 3 |

87. பட்டியல் I ஐ, பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு:

பட்டியல் I பட்டியல் II

(a) நிலநடுக்கம் 1. நிலச்சரிவு

(b) கடற்கோள் 2. போபால்

(c) நீலகிரி 3. ரிக்டர் அளவு

(d) வாயுக்கசிவு 4. அலை அலையாக

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| **(B)** | **3** | **4** | **1** | **2** |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

88. இந்தியாவில் பருத்தி துணி உற்பத்தி செய்யும் ஆலைகள் அதிகமாக உள்ள மாநிலம் எது?

(A) குஜராத் (B) மேற்கு வங்காளம் (C) மகாராஷ்டிரம் **(D) தமிழ்நாடு**

89. இந்தியாவிலுள்ள மிகவும் முக்கியமான தொழில் எது?

(A) துணிமணிகள் (B) சணல் (C) நகைகள் **(D) கைத்தறி**

90. பரம்பிக்குளம் திட்டம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) பெரியார் **(B) கோயம்புத்தூர்** (C) ஊட்டி (D) கரூர்

winmeen.com

91. தூத்துக்குடிக்கு பிரசித்தி பெற்றது

**(A) ஸ்பிக் உரத் தொழிற்சாலை** (B) இரும்பு எ∴கு ஆலை

(C) அலுமினியம் தொழிற்சாலை (D) இயந்திரக்கருவி ஆலைகள்

92. தமிழ்நாட்டின் பைகாரா திட்டம் எந்த மாவட்டத்தில் உள்ளது?

(A) சேலம் (B) பெரியார் **(C) நீலகிரி** (D) கன்னியாகுமரி

93. எந்த தேசிய நெடுஞ்சாலை ஆக்ராவையும் மும்பையையும் இணைக்கிறது?

(A) NH1 (B) NH7 **(C) NH3** (D) NH5

94. இந்தியாவின் மிகப் பழமையான எண்ணெய் சுத்திகரிப்பாலை

(A) ஹால்டியா **(B) திக்பாய்** (C) பாருணி (D) கொச்சின்

95. தேனி மாவட்டம் மதுரை மாவட்டத்திலிருந்து பிரிந்த வருடம்

(A) 1996 **(B) 1997** (C) 1998 (D) 1999

96. தமிழ்நாட்டில் தர்மபுரி மாவட்டம் எதற்கு பெயர் பெற்றது?

**(A) கிரானைட்** (B) குவாார்ட்ஸ் (C) சுண்ணாம்புக்கல் (D) இரும்புத்தாது

97. சூரிய ஒளி புவியை வந்தடைய ஆகும் நேரம்

(A) 45 நிமிடம் **(B ) 8 நிமிடம்** (C) 4 நிமிடம் (D) 2 நிமிடம்

98. இமய மலையின் எப்பகுதி கிழக்கு மேற்காக அதிக பரவலைக் கொண்டுள்ளது?

(A) ஹீமாயூன் இமயமலை (B) அஸ்ஸாம் இமயமலை

(C) பஞ்சாப் இமயமலை **(D) நேபாள் இமயமலை**

99. கீழ்க்கண்ட வாக்கியங்களை கவனி

உறுதி (A) : ஈர அயன பிரதேசங்களில் மண் இலை மக்கு இன்றியமைகிறது.

காரணம் (R): அதிக மழைப்பொழிவு, இலை மக்கினை அடித்துச்செல்லும் காரணி

கீழே குறிப்பிட்டுள்ள குறியீட்டில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

**(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.**

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல.

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

100. சாத்பூராவிற்கும், விந்திய மலைக்கும் இடையே ஓடும் ஆறு எது?

(A) கோதாவரி (B) கண்டக் (C) தபதி **(D) நர்மதா**